


துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (14.12.2024) சென்னை கிறித்துவக் கல்லூரி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள எம்.சி.சி, – எம்.ஆர்.ஃஎப். இன்னோவேசன் பூங்காவை திறந்து வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஆர். ராஜா, இ.கருணாநிதி, மாவட்ட ஆட்சியர் ச.அருண்ராஜ், எம். ஆர். ஃஎப் நிறுவனத்தின் தலைவர் கே.எம். மேமன், துணைத் தலைவர் அருண் மேமன், சென்னைக் கிறித்துவக் கல்லூரியின் முதல்வர் டாக்டர் பால் வில்சன் ஆகியோர் கலந்து கொண்டனர்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (14.12.2024) சென்னை கிறித்துவக் கல்லூரி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள எம்.சி.சி. – எம்.ஆர்.ஃஎப் இன்னோவேசன் பூங்காவை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஆர். ராஜா, இ.கருணாநிதி, மாவட்ட ஆட்சியர் ச.அருண்ராஜ், எம்.ஆர். ஃஎப் நிறுவனத்தின் தலைவர் கே.எம். மேமன், துணைத் தலைவர் அருண் மேமன், சென்னைக் கிறித்துவக் கல்லூரியின் முதல்வர் டாக்டர் பால் வில்சன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம், அரிமளம் வட்டாரம், நல்லம்மாள் சமுத்திரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறையின்கீழ், கலைஞரின் வருமுன் காப்போம் திட்ட சிறப்பு மருத்துவ முகாமினை, சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி துவக்கி வைத்து, மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின்கீழ் மருந்துப் பெட்டகங்களை வழங்கினார். உடன் புதுக்கோட்டை மாவட்ட சுகாதார அலுவலர் மரு.ராம்கணேஷ், அரிமளம் ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.மேகலாமுத்து, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



கரூர் ஒன்றியம் மின்னாம்பள்ளி பஞ்சமாதேவி ஊராட்சி அலுவலகத்தை மின்சாரம் – மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி திறந்து வைத்தார். உடன் அரவக்குறிச்சி எம்.எல்.ஏ . ஆர். இளங்கோ, கரூர் மாவட்ட கலெக்டர் மீ.தங்கவேல், ஊராட்சி தலைவர் சாந்தி கருணாநிதி, மாவட்ட கழக துணை செயலாளர் எம்.எஸ்.கே. கருணாநிதி, ஒன்றிய கழகப் பொறுப்பாளர் முத்துக்குமாரசாமி, மாவட்ட வருவாய் அலுவலர் கண்ணன் உள்ளிட்டோர் உள்ளனர்.

## 45 ஆயிரம் சதுர அடியில் எம்.சி.சி.– ‘எம்.ஆர்.எஃப். இன்னோவேஷன் பார்க்’

# ‘ஒரு ட்ரில்லியன் டாலர் பொருளாதாரம்’ எனும் முதலமைச்சரின் கனவுகளுக்கு வலுசேர்க்கும்!

## சென்னை, கிறித்துவக் கல்லூரியில் நடைபெற்ற தொடக்க விழாவில்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்துரை!

**சென்னை, டிச. 16 -**

**சென்னை, கிறித்துவக் கல்லூரியில், எம்.ஆர்.எஃப் நிறுவனத்தின் பங்களிப்புடன் எம்.சி.சி- ‘எம்.ஆர்.எஃப் இன்னோவேஷன் பார்க்’ (MCC - MRF Innovation Park) உருவாக்கப் பட்டுள்ளது.**

**இந்திய ஒன்றியத்திலேயே 45 ஆயிரம் சதுர அடியில் ஒரு கலை & அறிவியல் கல்லூரியில் அமைக்கப்படும் மிகப்பெரிய `இன்னோவேஷன் பார்க்’ (Innovation Park) ஆக இந்த மையம் அமைந்துள்ளது. இதன் திறப்பு விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு `இன்னோவேஷன் பார்க்’கைத் திறந்து வைத்து சிறப்புரை யாற்றினார்.**

**அப்போது, ‘ஒரு ட்ரில்லியன் டாலர் பொருளாதாரம் எனும் முதலமைச்சர் அவர்களின் கனவை நனவாக்கும் முயற்சிகளுக்கு வலுசேர்க்கும் வகையில், இம்மையம் அமைக்கப் பட்டுள்ளது. கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்கள் பட்டம் பெறுகிறபோதே வேலை தேடுபவர்களாக இல்லாமல், வேலையை உருவாக்குபவர்களாக உயருவதற்கு வழி வகை செய்யும் வண்ணம் அமைந்துள்ளது” என்று அவர் குறிப்பிட்டார்.**

விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:

இந்தக் கல்லூரி என் மனதுக்கு மிகவும் நெருக்கமான கல்லூரி. நான் அமெரிக்கா செல்லும் முன்பு, இங்குதான் ‘டோஃபெல்’ தேர்வு எழுதினேன். அதனால், மிகவும் பெருமிதத்துடன் இந்நிகழ்வில் நான் கலந்துகொள்கிறேன்.



இந்தியாவின் தலைசிறந்த கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் ஒன்றாகத் திகழும் இந்த பெருமைவாய்ந்த சென்னை கிறித்துவக் கல்லூரிக்கு வந்து உங்களை எல்லாம் சந்திப்பதில், மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

**சென்னையின் தூண்களில் ஒன்று!**

சென்னை கிறித்துவக் கல்லூரி, சென்னையின் தூண்களில் ஒன்று. ஒடுக்கப்பட்ட மற்றும் விளிம்பு நிலை மக்களுக்கு கல்விச் சேவை புரிவதில் நீண்ட பாரம்பரியம் கொண்ட நிறுவனம் இது. இந்தக் கல்லூரி இன்னும் 12 ஆண்டுகளில் 200-வது ஆண்டு விழாவைக் காண இருக்கிறது. 200 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த குறிப்பிட்ட சிலர்தான் படிக்க முடியும் என்ற நிலையை, எல்லோரும் படிக்கலாம் என்று மாற்றியது, நம்முடைய சென்னை கிறித்துவ கல்லூரி. எண்ணிலடங்கா மாணவர்களின் வருங்காலத்தை வடிவமைத்ததில் இந்தக் கல்லூரிக்குப் பெரும் பங்குண்டு.

**வரவேற்கத்தக்கது!**

2030 ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டை ஒரு ட்ரில்லியன் டாலர் பொருளாதாரமாக மாற்ற, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் ‘ஸ்டார்ட் அப்’ தமிழ்நாடு, `கைடன்ஸ்’ தமிழ்நாடு, `ஃபேம்’ தமிழ்நாடு போன்ற திட்டங்கள் மூலம் புதுமை, தொழில்முனைவு ஆகியவற்றை வளர்ப்பதைக் குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது திராவிட மாடல் அரசு. அந்தப் பயணத்தில் இந்த இன்னோவேஷன் பார்க்கை தொடங்கியிருப்பதன் மூலம் எம்.சி.சி.யும் எம்.ஆர்.எஃப் ஆகியவை கைகோர்த்திருப்பது வரவேற்கத்தக்கது.

45 ஆயிரம் சதுர அடியில் தொடங்கப்பட்டுள்ள இந்தப் புத்தாக்க மையம், நாட்டிலேயே கலைக் கல்லூரி ஒன்றில் தொடங்கப்பட்டுள்ள முதல் மையம் என்பதை, அறிந்து நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

**புரட்சிகரமான சாதனை!**

இப்படிப்பட்ட மையங்கள் எல்லாம் முதல் தர நகரங்களில் அல்லது பொறியியல் கல்லூரிகள் அல்லது ஐ.ஐ.டி. போன்ற முதல்தர கல்வி நிறுவனங்களில்தான் இருக்கும் . ஆனால், இவற்றை கலைக் கல்லூரிகளிலும் தொடங்க முடியும் என்பதை, எம்.சி.சி நமக்கு வழிகாட்டி உள்ளது.

உண்மையில் இது ஒரு புரட்சிகர சாதனை. இதைச் சாத்தியப்படுத்திய அனைவருக்கும் என் வாழ்த்துகள். இங்குள்ள ஆய்வகங்கள் மற்றும் வசதிகள் ஆகியவற்றைக் கண்டு நான் ஆச்சரியமடைந்தேன்.

கம்ப்யூட்டேஷனல் இன்ஃபோர்மாட்டிக்ஸ் லேப், சைக்கோ மெட்ரிக் லேப், டேட்டா அனலிடிக்ஸ் லேப், பிசினஸ் அனலிடிக்ஸ் லேப், ரைட்டர்ஸ் லேப் எனப் பல ஆய்வகங்கள் இங்கே உள்ளன.

இவை இங்கு பயிலும் மாணவர்களுக்குப் பல்வேறு துறை சார்ந்த திறன்களை, வளர்த்துக் கொள்ள வாய்ப்பளிக்கும். இந்த மையம் தமிழ்நாட்டின் மகுடத்தில் இடம்பெறும் இன்னொரு மயிலிறகு. நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், வரும் ஆண்டுகளில் 5 ஆயிரத்திற்கும் அதிகமான ‘ஸ்டார்ட் அப்’ நிறுவனங்களை, தமிழ்நாடு கொண்டிருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்.

**பொருளாதாரம் வளரும்!**

இந்த இன்னோவேஷன் பார்க் வெகுவிரைவில் நூற்றுக்கணக்கான ‘ஸ்டார்ட் அப்’ நிறுவனங்களை உருவாக்கும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. அதன் மூலம் நமது மாநிலத்தின் பொருளாதாரம் மட்டுமல்ல, நமது நாட்டின் பொருளாதாரமும் வளர்ச்சி பெறும். இந்த மையத்தைச் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று மாணவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் செய்வதன் மூலம் நீங்கள் வேலை பெறுபவர்களாக மட்டுமல்லாமல், வேலைகளை உருவாக்குபவர்களாகவும் உயர்வீர்கள்.

இந்த மையம் உங்களின் திறமைகள், சிந்தனைகள் மற்றும் வாய்ப்புகளை அதிகரித்து உங்கள் வருங்காலத்தையும் நமது மாநிலத்தின் வருங்காலத்தையும் வளமாக்கும்.

இந்த மையத்துக்கு ரூ.30 கோடி வழங்கி இருக்கும் எம்.ஆர்.எஃப் நிறுவனத்தின் பெருந்தன்மையை நான் வாழ்த்துகிறேன். இப்படி ஒரு மையத்தை உருவாக்க முன்வந்த சென்னை கிறித்துவக் கல்லூரிக்கு என் மனம் நிறைந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மையம் நமது மாணவர்கள் மற்றும் நமது மாநிலத்தின் வருங்காலத்தின் மீது ஏற்படுத்த உள்ள மாற்றங்களை எதிர்நோக்கி இருப்போம்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இவ்விழாவில் சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஆர்.ராஜா, இ.கருணாநிதி, எம்.ஆர்.எஃப் நிறுவனத்தின் தலைவர் கே.எம்.மேமன், துணைத்தலைவர் அருண் மேமன், நிர்வாக இயக்குநர் ராகுல் மேமன் மாப்பிள்ளை, சென்னை கிறித்துவ கல்லூரி முதல்வர் முனைவர் வில்சன், தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் ஆலோசகர் டேவிதார் ஐ.ஏ.எஸ். உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



திருவாரூர் மாவட்டம் பேரளம் அருகே மழையால் உடைப்பெடுத்த கீரனூர் வாய்க்காலை பார்வையிட்டு அடைக்க ஏற்பாடு செய்த மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., அங்குள்ள விவசாயிகளிடம் ஆறுதல் கூறி தேவைகள் அறிந்து அவர்களது குடும்பங்களுக்கு உதவிகளை மேற்கொண்டார். உடன் ஒன்றியச் செயலாளர் கேப்டன் செல்வராஜ், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஏ.எஸ்.குமார், பாலமுத்து மற்றும் கழக நிர்வாகிகள் இருந்தனர்.



தமிழகத்தின் அதிகப்படியான 40 சென்டிமீட்டர் மழை அரியலூர் மாவட்டம் டெல்டா பகுதி தா.பழூர் ஒன்றியத்தில் கொட்டித்தீர்த்தது. தகவல் அறிந்த தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் விக்ரமங்கலம், உல்லியகுடி, அம்பாபூர்,முட்டுவாஞ்சேரி, சாத்தம்பாடி, அரங்கோட்டை, ஸ்ரீபுரந்தான், சுத்தமல்லி, அணைக்குடி, கார்குடி, ஆகிய கிராமங்களில் உள்ள சாலைகள், விளை நிலங்கள், நீர்த்தேங்கங்கள் என அனைத்து பகுதிகளையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு ஊர் பொதுமக்கள் கோரிக்கைகளை கேட்டறிந்து மீட்பு பணிகளை துரிதப்படுத்தினார். உடன் அரசு அலுவலர்கள், ஒன்றியப் பொறுப்பாளர் தனவேல், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன் மற்றும் மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், கழக தோழர்கள் உள்ளனர்.